பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 19 செவ்வாய்க்கிழமை 05.09.2023 கதிர் 298

# 13 மைனஸ்தான் சாத்தியம் என்று மோடியிடம் தெரிவித்தார் ரணில்

## உண்மையைப் போட்டுடைக்கிறார் ஐதேக பொதுச் செயலர்

**அரசமைப்பின்13திருத்தத்தைபொலிஸ் அதிகாரம் இன்றி நடைமுறைப்படுத்துவதாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் மோடியிடம் உறுதியளித்திருந்தார் என்றும், அது தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையென்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.**

**ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:**

**13ஆம் திருத்தம் இந்த நாட்டின் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டம். அதனால் 13ஐ செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்.**

☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழர்கள் மத்தியில் இன்னும் திருமணங்களுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. குடும்ப அமைப்பு முறையில் தொடர்ந்தும் அதீதமான நம்பிக்கையைக் கொண்டிருக்கும் ஒரு சமூகம் என்பதால் தமிழர்களுக்கு திருணம் மிக முக்கியமான ஒரு நிகழ்வு. அது காதல் திருமணமாக இருந்தாலும் பெற்றோர் பார்த்து பொருத்தி வைத்த ஏற்பாட்டுத் திருமணமாக இருந்தாலும் அந்த நிகழ்வு முக்கியதுவம் வாய்தது. அதையொட்டி பெரும் ஏற்பாடுகளும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஏராளம். வீட்டைக் கட்டிப்பார் கலியாணத்தைக் கட்டிப்பார் என்பார்கள் பெரியவர்கள். அந்தளவிற்கு வாழ்க்கையில் நிகழ்த்தப்படக்கூடிய மிகப் பெரிய காரியங்களில் ஒன்றாகத் திருமணம் இன்னும் திகழுக்கின்றது.

மேலை நாடுகளைப் போன்று மிக நெருக்கமானவர்களை மட்டும் அழைத்து ஒரு நூறு அல்லது 200 பேருடன் இங்கு திருமணங்கள் ☞ 2

## ஐ.தே.க. பொதுக்கூட்டம் காலவரையறை இன்றி பிற்போடப்பட்டது

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுக் கூட்டத்தை மறுஅறிவித்தல் வரையில் ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சியின் 56ஆவது கட்சி சம்மேளனத்தை செப்டெம்பர் 10 நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் ☞ 8

## அருட்தந்தை சிறில் காமினிக்கு எதிராக அரச புலனாய்வு சேவை பிரானி வழக்கு

### தன் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தினாராம்

அருட்தந்தை சிறில் காமினி இணையத்தளம் ஊடாக வெளியிட்ட கருத்துக் காரணமாகத் தனது நற்பெயருக்கு பங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரச புலனாய்வுச் சேவையின் பிரதானிசுரேஷ்சலேகொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக சர்வதேச நியாய ஒன்றியம் 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 மெய்நிகர் தொழிற்நுட்பம் மூலம் நடத்திய கலந்துரையாடலில் அருட்தந்தை சிறில் காமினி வெளியிட்ட கருத்தால் தனக்கு ஏற்பட்ட அவமதிப்புக்காக 50 மில்லியன் ரூபாய் இழப்பீட்டு தரவேண்டும் என்று கோரி சுரேஷ் சலே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

முறைப்பாட்டாளர்சார்பில் சட்டத்தரணிபஹான்வீரசிங்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்துள்ள சுரேஷ் சலே, தான் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் இராணுவத்தில் 36 ஆண்டு காலம் கடமையாற்றியவர் என்று ம ☞ 2

## நீதித்துறை சுயாதீனத்தை காக்க அணி திரள்வோம்

### மூத்த சட்டத்தரணிகள் அறைகூவல்

நீதித்துறை சுயாதீனத்தைப் பாதுகாக்க அணிதிரள்வோம் என்று மூத்த சட்டத்தரணிகள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

நிறைவேற்ற அதிகாரம், ஜனநாயகம் மற்றும் நீதித்துறை என்ற தொனிப் பொருளில் நேற்றையதினம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற பொதுக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்கள் இந்த அறைகூவலை விடுத்தனர். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில், நாம் சட்டத்துறையைப் பாதுகாப்பது போன்றுதான், ஜனநாயகத்தின் ஏனைய அங்கங்களையும் பாதுகாக்கவேண்டும். அவ்வாறான செயற்பாட்டின் போது நீதித்துறைக்கு அச்சுறுத்தல் வருமாக இருந்தால் விசேடமாக எழுந்து நிற்பது சட்டத்துறையாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால், சட்டத்துறையில் மக்கள் நம்பிக்கையை இழந்தால் நாம் சட்டத்துறை சார்ந்தவர்களாக இருப்பதில் பயனில்லை. ஆகவே தன்னலமாக ☞ 2

## பாரதியாரின் கொள்ளுப்பேரன் மட்டு. வருகை



(வி.ரி.சகாதேவராஜா)

மகாகவிபாரதியாருடைய கொள்ளுப்பேரன் கலாநிதி இராஜ்குமார் பாரதி திங்கட்கிழமை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்திற்கு வருகை தந்தார்.

அவரை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் இல்லத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்றார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த ☞ 8

## ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல் 19 வயது இளைஞர் கைது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தமது பேஸ்புக் கணக்கில் பதிவிட்டிருந்த ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் எப்பாவல, மெடியாவ பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செப்டெம்பர் 7 தம்புத்தேகம மற்றும் எப்பாவல பகுதிகளுக்குச் செல்லவுள்ள நிலையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ராணுவ முகாமில் களவாடப்பட்ட துப்பாக்கியுடன் சிப்பாய் கைது

(ந.லோகதயாளன்.)

இயக்கச்சி இராணுவ முகாமில் இருந்து ரி-56 2 வகைத் துப்பாக்கி ஒன்றை களவாடிச் சென்றார் என்று கூறப்படும் இராணுவச் சிப்பாய் அறிவியல் நகர்ப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இயக்கச்சி முகாமில் பணியாற்றும் சக சிப்பாய் ஒருவரின் துப்பாக்கியும் 4 ரவைக் கூடுகள், ரவைகளும் களவாடப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அதேநேரம் முகாமில் இருந்து சிப்பாய் ஒருவர் காணாமல் போயிருந்தமையையும் கண்டறியப் பட்டது.

இதனால் சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தொடருந்தில் சோதனை நடத்தப்பட்டது. அதிலிருந்த சிப்பாய் கைது செய்யப்பட்டார். ☞ 8

## பொதுப் போக்குவரத்தினை நவீனப்படுத்த அரசு திட்டம்

### அமைச்சர் பந்துல அறிவிப்பு

பொதுப் போக்குவரத்து டிஜிட்டல் மயமாக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 200 மின்சார பேரூந்துகளை இறக்குமதி செய்ய முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. அந்தத் திட்டத்திற்காக,தற்போது முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுகூட்டுமுயற்சியாக செயல்படுத்தப்பட உள்ளது. மேலும்,முதலீட்டாளர்களுக்கு மின்னேற்றநிலையங்களை நிறுவவும்வாய்ப்பும்வழங்கப் பட்டுள்ளது.

பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஊடாக, முதலீட்டாளர்கள் முதலீடு செய்த தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்திய பிறகு, பேருந்துகளின் உரிமை அரசுக்குக் கிடைக்கும். இதற்காகச் சீனா, கொரியா உட்பட உலகின் எந்த நாடும் விண்ணப்பிக்கலாம். இது ஒரு முதலீட்டு வாய்ப்பாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள அனைத்துப் பொதுப்போக்குவரத்துகளும் புதைபடிவ எரிபொருட்களின் பாவனையிலிருந்து விடுபடுவது தொடர்பில் சர்வதேச உடன்படிக்கையொன்று உள்ளது. கார்பன் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் சுற்றுச்சூழல் கட்டமைப்பைப் பாதுகாக்க இதில் முதலீடு செய்கிறார்கள். மின்சாரப் பேருந்துகள் சுற்றுச்சூழலுக்கு பெறுமதியைக் கொண்டுவருவதனால், அந்தப் பெறுமதிக்கு உலகின் பல்வேறு அமைப்புகள் அதிக விலை கொடுத்து வருகின்றன.

மேலும், அரச நிறுவனங்களின் வருமானம் குறைவதைத் தடுக்க அனைத்து நிறுவனங்களையும் டிஜிட்டல் மயமாக்கவேண்டும். தொடருந்து மற்றும் போக்குவரத்து சபை பேரூந்துகளில் டிக்கெட் வழங்கும் முறைக்குப் பதிலாக மின்னணு அட்டை முறையைக் கொண்டு வருவதற்கான அமைச்சரவைப் பத்திரம் ☞ 2

### க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளில்

## மாவட்ட மட்டத்தில் முதல் 5 இடங்களையும் சுவீகரித்து இம்முறை யாழ். இந்து சாதனை

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. இணையத்தில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை உடனடியாகப் பார்;க்க முடிந்த நிலையில், யாழ். இந்துக் கல்லூரி இம்முறை கணிதம், விஞ்ஞானப் பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் முதல் 5 இடங்களையும் சுவீகரித்துச் சாதனை புரிந்துள்ளது.

பௌதீக விஞ்ஞானத்தில் மாவட்ட மட்டத்தில் முதல் 6 இடங்களையும் உயிரியல் விஞ்ஞானத்தில் மாவட்ட மட்டத்தில் முதல் 5 இடங்களையும் சுவீகரித்துள்ளது.

பௌதீக விஞ்ஞானத்தில் 21 மாணவர்கள் 3 ஏ சித்தியையும் உயிரியல் விஞ்ஞானத்தில் 10 மாணவர்கள் 3 ஏ சித்தியையும் பெற்றுள்ளனர் என்று பாடசாலை அறிவித்துள்ளது.

இதற்கமைய உயிரியல் விஞ்ஞான பிரிவில் ஆனந்தஜோதி வித்தியாசாகர், கண்ணன் பவிதரன், நாகசேன்னன் சாரங்கன், தர்மலில்கம் அமலன், ரகுதாதன் தனுசன் மாவட்டத்தில் முறையே முதல் 5 இடங்களையும்பெற்றுள்ளனர்.

உயிரியல்தொழில்நுட்பப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்பெண்கள்பாடசாலை மாணவி சசிகா பாஸ்கரன் மூன்றுபாடங்களிலும்ஏசித்தி பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப்பெற்றுள்ளார்.

பௌதீக விஞ்ஞானத்தில் சிறிபண்டாகரன் சிநேகன், லெஸ்லி பாஸ்கரதேவன் அபிசேக், சந்திரசேகரம் அபிசேகன், பகீரதன் திபக் மொகமட் நிஸ்பார் மொகமட் இஸ்சாத், விமலேஸ்வரன் கிஷாலன் ஆகியோர் மாவட்ட மட்டத்தில் முதல் 6 இடங்களையும் பெற்றுள்ளனர்.

வவுனியா மாவட்ட மட்டத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றுள்ளனர். ☞ 8

## சபாநாயகருடன் ஐ.நா. பிரதிநிதி சந்திப்பு

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் ஐக்கியநாடுகள்சபையின்புதிய வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்ஆன்ட்ரே பிராஞ்சுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இலங்கையில் ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டமை மற்றும் நாடாளுமன்ற வரவு செலவு திட்ட அலுவலகத்தைஅமைப்பதற்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அரசியலில்பெண்களின் பிரதிநித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு இளைஞர் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

இந்த ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நடத்தப்படுவதில்லை. குறைந்தது 500 ஆயிரம் பேராவதுஒருதிருமணத்திற்கு அழைக்கப்படுவார்கள். நாள் ஆயிரம் பேருக்குச் சாப்பாடு போட்டேன் 2000 பேருக்குச் சாப்பாடு போட்டேன் என்றி அது பற்றிப் பெருமை பேசுபவர்களே ஏராளம் பேர் உண்டு. இப்போதெல்லாம்பாரம்பரியத் திருமணங்களையும்தாண்டி, தண்ணீருக்கடியில் திருமணம், பெண் ஹெலியில் வந்திறங்கித் திருமணம், விலைகூடிய சொகுசுக் காரில்பெண் மணவறைக்கு வந்திறங்குவது, மாட்டு வண்டியில் மாப்பிள்ளை பெண்ணைஅழைத்துவந்து திருமணம், மணவறைக்கு மாப்பிள்ளை பெண்ணை அழைத்து வரும்போது பாட்டுடன் நடனமும் ஆடி வருவது என்று நவீன திருமணங்கள் இன்னும் இன்னும்செலவுகளையும்ஆடம்பரங்களையும் அள்ளிக் கொட்டும் நிகழ்வுகளாகிவிட்டன.

இப்போது எதற்கு இந்தப் பீடிகைகள் என்றுதானே கேட்கிறீர்கள். இன்றைக்கு இரண்டு திருமணங்கள் குறித்த தகவல்களைத்தான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போகின்றேன். தமிழ் அரசியல் பரப்பில் முக்கியமானவர்களாக இருக்கக்கூடிய இருவர் தொடர்புபட்ட திருமணங்கள் அவை. அவர்கள் அரசியல் பிரபலங்கள் என்பதால் அவர்களின் பிள்ளைகளின் திருமணங்களையும் இப்படிப் பொதுத் தளத்திற்குக் கொண்டுவருவது சரிதானா? தர்மம்தானா? என்று கேட்கலாம். அவை அந்த அரசியல்வாதிகளினது பிள்ளைகளின் தனிப்பட்ட சமாச்சாரங்களாகவே இருக்கட்டும். அதைநோண்டி நொங்கெடுப்பது எனது நோக்கமல்ல. ஆனால், அந்தத் திருமணங்களின் பின்னால் அவர்கள் சார்ந்திருக்கக்கூடியஅரசியல், பொது வாழக்கையில் அவர்களின் நேர்மை பற்றிய விடயங்கள்சம்பந்தப்படுவதன் காரணமாகஅவற்றைமக்கள் அறிந்திருக்கவேண்டியதும் அவசியம் என்றே நான் கருதுகின்றேன். அதனால் பட்டும் படாமலும் அந்தத் திருமணங்களைப் பற்றிச் சொல்லிவிடலாம் என்று நினைக்கின்றேன்.

அதில் முதல் திருமணம் இந்தியாவில் நடந்தது. ஆளும் தரப்பைச் சேர்ந்த முக்கியமான அரசியல்வாதி ஒருவர்அந்தத்திருமணத்தில் கலந்துகொண்டிருந்தார். இங்கேயாருக்கும்திருமணம் பற்றிஅவர்மூச்சுவிடவில்லை. கட்சிக்காரர்களுக்கு அரசல் புரசலாக விடயம் தெரியும். என்றாலும் அதீத அமைதி காத்தார்கள். உயிரைப் பணயம் வைக்க விரும்பியிருக்கமாட்டார்கள் என்று நினைக்கின்றேன். திடீரென்று எந்தவித உத்தியோகபூர்வ நோக்கமும் இன்றி அவர் இந்தியா சென்றமை குறித்து எங்கள்செய்திமூக்குவியர்க்கத் தொடங்கியது. விசாரித்ததில் மீனவர் பிரச்சினை தொடர்பில் சில பல கலந்துரையாடல்களை நடத்துவதற்காகச் சென்றிருக்கிறார் என்கிற வகையில் எம்மை மடை மாற்றி விட்டார்கள். ஒருவேளை அப்படியும் இருக்குமோ என்று நாங்களும் அசந்துபோன நேரத்தில்தான் அந்தச்செய்தி காதுகளை வந்தடைந்தது.

அவர் ஒரு திருமணத்தில் கலந்துகொள்வதற்காகவே அங்கு சென்றார் என்பதே அந்தச் செய்தி. திருமணம் எங்கு நடந்தது, எப்படி நடந்தது, யாருக்கு நடந்தது என்கிற விவரங்களைத் தேடினால் அவற்றைப் பெறுவதுசிதம்பரசக்கரத்தைப் பேய் பார்த்தது போன்ற நிலையை ஏற்படுத்தியது. சவால்தானேஆர்வத்தையும் அதிகம் தூண்டக்கூடியது. விவரங்களைத்திரட்டிகூட்டிக் கழித்துப் பார்த்தபோது, பழையகதைகள்வதந்திகளின் உண்மைத் தன்மை வெளிப்படத் தொடங்கியது.

அந்த அரசியல்வாதி அந்தத் திருமணத்திற்குச் செல்லவேண்டிய அவசியம் என்ன என்பதற்கான விடை 10அல்லது15வருடங்களுக்கு முந்தைய அந்த வததிகளில் புதைந்திருந்தது. அது உண்மை என்பதற்கான ஆதாரத்தைஆண்டவர்யேசு இப்போது காட்டிவிட்டார்.

அவசரமாக அவரது கட்சிக்காரர்களுக்கு அழைப்பெடுத்து என்ன அவர் தனது பிள்ளையின் திருமணத்திற்குத்தான் இந்தியா போனவராமே என்றால், "ஆ..... இப்பத்தான் ஏதோ கிட்ட வந்திருக்கிறீர்கள் போல.... எங்களுக்கொன்றும் தெரியாது" என்று கண்ணாமூச்சி ஆடினார்கள். அவர்கள் அப்படி நடந்துகொள்வதிலும் ஒரு நியாயம் உண்டு. ஏனெனில் அந்த அரசியல்வாதிக்கு திருமணம் நடந்ததாகவோ அவருக்கு ஒரு பிள்ளை இருப்பதாகவோ இங்கு யாருக்கும் தெரியாதபோது அதைப் பற்றி எதையாவது உளறி உயிரைப் பணயம் வைக்க அவர்கள் விரும்பமாட்டார்கள்தானே!

நல்லதுயாராவதுதிருமணம் செய்துகொண்டு நன்றாக வாழட்டும். குறைந்தபட்சம் திருமணத்திலாவது தனது அப்பா எனப்படுபவர் நேரில் கலந்துகொண்டார் என்ற சந்தோசம் அந்தப் பிள்ளைக்குக்கிடைக்கட்டும். எனவே அந்த அரசியல்வாதியின் பெயர் விவரங்களை இங்கே தவிர்த்துவிட்டேன்.

..................

அண்மையில் அந்த இரண்டாவது திருமணம் நடந்துள்ளது. இது எதிரணியைச் சேர்ந்த ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆளும் தரப்பு என்று சொல்லக்கூடிய ஓர் அரசியல்வாதியின் மகளது திருமணம். அவரது மகனது திருமணம் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் வெகு விமரிசையாக நடைபெற்றது. சக அரசியல்வாதிகளுக்குஅது பற்றி அறியத் தரப்பட்டிருந்தது. அவர்கள் அழைக்கப்படவில்லையாயினும் தகவல் பகிரப்பட்டிருந்தது. ஆனால் அந்தத் திருமணம் பொது வெளியில் தமிழர்களால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. காரணம் அரசியல்வாதியான தந்தை ஒரு தீவிர தமிழ்த் தேசியவாதம் பேசும் கட்சியைச் சேர்ந்தவராகஇருந்தபோதும் மகன் திருமணம் செய்துகொண்டது தமிழர் அல்லாத ஒருவரை என்பதுதான்.

திருமணம் மகனது விருப்பம். இரு மனங்கள் விரும்பியதால் ஒரு தந்தையாக அவர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் கடமையை அவர் செய்தார். அதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், அவரதுகட்சிசார்ந்தஅரசியல் நிலைப்பாடுகளுக்கும்இந்தச் செயலுக்கும் இடையிலான நகைமுரண் (ஐரணி) சமூக வலைத்தளங்களில் பேசுபொருளானது. அது அரசியல்விவாதங்களையும் எழுப்பியது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இந்தப் பிரச்சினை உண்டு. அவர் தீவிர தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டாலும் அவரது பிள்ளைகள் தமிழர் அல்லாதோரைத்திருமணம் செய்திருக்கிறார்கள் என்பது அரசியல்கரும்புள்ளியாகவே அவர் மீதும் நிலைத் திருக்கிறது. அவரது அரசியல் செயல்பாடுகளை எடைபோடுவதற்கும் விமர்சிப்பதற்கும்அவரைமுன்மதிப்பீடு செய்வதற்கும் இந்தத் திருமணங்கள் எப்போதும் ஒரு காரணமாக இருக்கின்றன. அவரது நேர்மையை சுற்றிச் சந்தேகங்களை எழுப்புவதற்கு அவை துணை நிற்கின்றன. குறிப்பாகத் தேர்தல் காலங்களில் அவை அவருக்குத் தர்மசங்கடங்களை ஏற்படுத் துகின்றன.

அதனால்தானோ என்னவோ தனது மகளின் திருமணத்தை எந்த முக்கிய அரசியல்வாதிகளையும், குறிப்பாக ஆளும் மற்றும் எதிரணித் தரப்பு அரசியல்வாதிகளுக்கு எந்தத் தகவலும் இன்றி 'சிம்பிளான' ஒரு நிகழ்வாக நடத்தி முடித்துவிட்டார் இந்தத் தன்தையும். தமிழர் பக்கத்தில் பெருந் தலைவர் மட்டும் திருமணத்தில் கலந்துகொண்டார். ஒரேமதத்தவர் அல்லது தேவாலயத்தைச் சார்ந்தவர் என்கிற வகையிலோ என்னவோ மற்றொரு அரசியல்வாதியும் திருமணத்தில் கலந்துகொண்டிருந்தார். ஆனாலும் எந்தத்தகவல்களும்வெளியே தெரியவரவில்லை.ஏனெனில் மகனைப்போலவே மகளும் விரும்பித் திருமணம் முடித்திருப்பது தமிழர் அல்லாத ஒருவரை. எனவே திருமணம்பற்றியஎந்தவொரு தகவலும் வெளியே வராமல் பார்த்துக்கொண்டார் தந்தை. திருமணம்பற்றியஒரேயொரு படம்கூட இம்முறைவெளியே வரவில்லை.

ஏற்கனவே அந்த அரசியல்வாதியும் மகளும் இருக்கும் படத்தையே சமூக வலைத்தளங்களில் போட்டுச்சகட்டுமேனிக்கு கரித்துக் கொட்டியவர்கள் தமிழர்கள். அப்படியிருக்கும்போதுஇந்தத் திருமணம்பற்றியதகவல்கள் இன்னும் மோசமாக மகளதுவாழ்க்கையைப்பந்தாடக் கூடும்என்றுஒருதந்தையாக அவர் அச்சப்பட்டிருந்தால் அதிலும்நியாயங்கள்உண்டு.

அவர் அப்படி என்னதான் மறைத்தாலும் செய்திமூக்குகளுக்கு வியர்க்காமல் இருக்குமா? திருமணம் நல்லபடி முடிந்து இப்போது பல நாட்களாகிவிட்டன. புதுமணத் தம்பதியர் தமது வாழ்க்கையைமகிழ்ச்சியுடன் தொடரட்டும் என்று வாழ்த்துவோம்.

இந்த இரு திருமணங்களுமே அவரவர் தனிப்பட்ட வாழ்க்கை. அது பற்றி கருத்துச் சொல்வதற்கு எமக்கு எந்த உரிமையும் இல்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையாக யாரைத்தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதும் அவர்களின் சுதந்திரம். அதை கேள்விக்குட்படுத்த எமக்கு எந்த அருகதையும்கூடக் கிடையாது. ஆனால், பொது வாழ்வில் இருப்பவர்களின் வீட்டில் நடப்பவற்றைத் தெரிந்துகொள்ளும் உரிமை அவர்களுக்கு வாக்களிக்கும் மக்களுக்கு இருக்கின்றது என்கிற அடிப்படையில் மட்டுமே இதனை உங்களுடன் பகிர்ந்துகொண்டிருக்கின்றேன். எனவே அவர் யார், இவர் யார் என்று கேட்டு என் மின்னஞ்சலை உங்கள் அஞ்சல்களால் நிரப்பிவைக்காதீர்கள். அவை எவற்றுக்கும் பதில் வராது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொதுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. அட்டை அல்லது க்யூஆர் சிஸ்டம் மூலம் பணத்தைப் பயன் படுத்தாமல் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்தால், இந்த ஒவ்வொருநிறுவனங்களின் வருமானத்தையும்குறைந்தது 50% சதவீதத்தினால் அதிகரிக்கலாம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் 4 வருடங்களுக்குப்பின்னர் துறைமுகத்திற்குத் தண்டவாளங்கள் அடங்கிய கப்பல் ஒன்று வந்துள்ளது. கொழும்பில் இருந்து பாணந்துறைவரையிலானதொடருந்துப்பாதைகள்பழுதடைந்துள்ளன. குறைந்தபட்சம் 5 வருடங்களுக்கு ஒரு முறை கரையோரப் தொடருந்துப் பாதைகள் மாற்றப்படவேண்டும். தண்டவாளங்கள் விரைவாக பழுதடைவதன் காரணமாக இந்தப் பாதைகளில் தொடருந்துகளின் வேகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அலுவலக ஊழியர்கள் உரிய நேரத்தில் பணிக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே கொழும்பில் இருந்து பாணந்துறை வரையிலான தொடருந்துப் பாதையை நவீனமயமாக்கும் பணிகள் எதிர்வரும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும் கொழும்பில் இருந்து காங்கேசன்துறை வரை மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் தொடருந்துகள்பயணிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

சமிக்ஞைக்கட்டமைப்பை நவீனமயமயப்படுத்தஇந்திய அரசின் கடன் உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது. களனி மிட்டியாவத்த தொடருந்துப் பாதையில் குறைந்த வேகத்துடன் பயணிப்பதற்குப் பதிலாக வேகத்தை அதிகரிக்கும் புனரமைப்புநடவடிக்கைகள் இம்மாதம் முதல் வாரத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

வெளிநாட்டில் இருந்து தொடருந்துப்பெட்டியொன்றை இறக்குமதி செய்வதற்கு 200 மில்லியன் ரூபாய் செலவாகும். இலங்கை தொழில் முயற்சியாளர் ஒருவரினால் 25 மில்லியன்ரூபாசெலவில்தொடருந்துப் பெட்டிகள் பழுதுபார்க்கப்படுகிறது. இதன்படி எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தினூடாக தற்போதுள்ள தொடருந்துப் பெட்டிகளை பழுதுபார்க்க எதிர்பார்த்துள்ளோம்-என்றார்

## 13 மைனஸ்தான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13ஆம் திருத்தத்தை செயற்படுத்துவது தொடர்பில் அரசினதும்ஜனாதிபதியினதும் நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்திய பிரதமரை சந்தித்துக் கலந்துரையாடியபோது தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதில் பொலிஸ் அதிகாரத்தை செயற்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கிறன. அதனால்பொலிஸ்அதிகாரம் தவிரஏனையஅதிகாரங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகஜனாதிபதி இந்திய பிரதமர் மோடியிடம் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று 13ஆம் திருத்தத்தை செயற்படுத்துவதில் ஏதாவது தடைகள் ஏற்பட்டால், வடக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகத் தனியான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதாகவும்இந்திய பிரதமர்மோடியிடம்ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார்.

வேறு ஜனாதிபதிகள் 13ஐ செயற்படுத்துவதில்லை என நாட்டுக்குள் தெரிவிக்கும் அதேநேரம் இந்தியாவுக்கு சென்று 13 பிளஸ் என தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆனால் ரணில் விக்ரமசிங்க 13 தொடர்பாக நாட்டில் தெரிவித்து வரும் விடயங்களையே இந்திய பிரதமரிடமும் தெரிவித்திருக்கிறார். அதனால் அரசாங்கத்தில்இருக்கும்சிலர் அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் தொடர்பாக என்ன கருத்தை தெரிவித்தாலும் 13 தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதனால்ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. 13ஐ செயற்படுத்த வேண்டும் என்பதில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் - என்றார்.

## அருட்தந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

அருட்தந்தை சிறில் காமினி வெளியிட்ட கருத்து காரணமாக எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்துவரும் வேளையில், இப்படியான கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் சமூகத்தில் தவறான நிலைப்பாடு உருவாகும். ஈஸ்டர்தாக்குதல் தொடர்பில் என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு காரணமாக நான்கடும்அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளேன்-என்றார்.

அருட்தந்தை சிறில் காமினியும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தார். வழக்கு விசாரணைகளை ஜனவரி 25 மீண்டும் நடத்துவது என்று தவணையிடப்பட்டது.

## நீதித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் சிந்தித்தாலும் கூட, நீதித்துறையின் சுயாதீனத்தினை பாதுகாப்பதிலே நாம் பலமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அதனைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் - என்றார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதிவிக்கிரமட்னதெரிவிக்கையில், நீதிமன்றங்கள் அரசின் பெயரால் செயற்பட்டாலும், சட்டங்களை இயற்றும் சட்டவாகத்துறை, நிறைவேற்றுத்துறை ஆகிய வற்றிலிருந்து விடுபட்டே செயற்பட வேண்டியுள்ளது. கடன் மறுசீரமைப்பு விடயத்தில் நீதிமன்றமோ வேறெந்த நிறுவனங்களோ வழங்கும் தீர்ப்புக்களைநாடாளுமன்றம் கருத்தில் கொள்ளாது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சபாநாயகரும் அவ்விதமான கருத்தினையே தெரிவித்துள்ளார். இந்த இரண்டு விடயங்களும் அரசமைப்புக்கு முரணானவை.

1968ஆம் ஆண்டு நதி, பள்ளத்தாக்குகள் அபிவிருத்தி தொடர்பான வழக்கில்நீதியரசரானவீரமந்திரி வழங்கிய தீர்ப்பில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தினை நீதிமன்றம் விமர்சனத்திற்கு உட்படுத்தவோ, விசாரணைகளை முன்னெடுக்கவோ முடியாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்பிரேரணைகள், வரைவுகளைவிசாரணைக்கு உட்படுத்த முடியும் என்பதும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே அரசமைப்புக்கு அமைவாக ஆளும்தரப் பின் விடயங்களை மீளாய்வு செய்கின்றபோது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோஎவ்விதமானதலையீடுகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று சட்டத்தரணிகளின் ஒன்றிணைவாக வலியுறுத்துகின்றோம்.

நீதிமன்ற சுயாதீனம், சட்டவாட்சி மற்றும் ஜனநாயகம்ஆகியவற்றின்அடிப்படையில் நாம் அர்ப்பணிப்புடன் ஒன்றிணைகின்றோம். சுயாதீனத்தன்மைதொடர்பில் தம்மால்பேசமுடியாதிருக்கும் நீதிபதிகள் சார்பில் இருக்கும் நாம் அவர்களின் விடயங்களையும் நிறைவேற்றுகின்றோம் - என்றார்.

கொழும்புபல்கலைக் கழகத்தின் பேராசிரியர் வசந்தா செனவிரதன தெரிவிக்கையில், மக்களின்அதிகாரமேநடைமுறைப் படுத்தப் படுகின்றது

தொடர்ச்சி 8 ம் பக்கம்...



காலைக்கதிர்
Kalaikkathir

# சிறைக் கைதியாக இருக்காமல் ரணில் மொட்டிலிருந்து வெளியேறவேண்டும்

## கோருகிறார் முஜிபுர் ரஹ்மான்



அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை இதுவரையில் குறைக்க முடியவில்லை. ஜனாதிபதி சிறைக் கைதியாக மாறியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டுவழிகள் காணப்படுகின்றன.

ஒன்று மொட்டுக் கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும். இல்லாவிட்டால் மொட்டு கட்சியிலிருந்து விலகி வெளியில் வரவேண்டும்.

அடுத்த ஜனாதிபதி பொதுவேட்பாளர் ரணில் என கூறுகிறார்கள். அவர் பொது வேட்பாளர் அல்லர். ராஜபக்ஷக்களின்வேட்பாளர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு அமைச்சர் கெஹலிய பொறுப்புக் கூற வேண்டும். மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்து கொள்வனவு, அவசர மருந்து கொள்வனவு மாபியா என அமைச்சர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தரமற்ற மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் ஒப்புக் கொண்டுள்ளது.

ஊழல்கள் நிருபிக்கப்படும் போது முன்வந்து அவரே பதவி விலகியிருக்க வேண்டும். இருப்பினும் அவர் அவ்வாறு செய்யவில்லை.

தற்போது நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது. மொட்டுக் கட்சியினர் அவருக்கு ஆதரவு வழங்கலாம். அவரை பாதுகாக்கலாம். ஆனால் மக்களை ஏமாற்ற முடியாது. தேர்தல் மூலம் இந்த அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

மேலும் அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை இதுவரையில் குறைக்க முடியவில்லை. ஜனாதிபதி சிறைக்கைதியாக மாறியுள்ளார்.

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து பயணிக்க வேண்டுமாயின் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு இரண்டுவழிகள் காணப்படுகின்றன. ஒன்று மொட்டுக் கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் மொட்டுகட்சியிலிருந்துவிலகி வெளியில் வரவேண்டும். இவ்வாறு இன்றி இந்த இரண்டுகட்சிகளும் இணைய வாய்ப்பில்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் சிலர் அடுத்த தேர்தலின் போது ரணிலுக்கு மொட்டு கட்சியினர் ஆதரவு வழங்குவார்கள் என கூறுகிறார்கள். மொட்டுக்கட்சிக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் வேறுபாடுகள் இல்லை. யார் எந்த கட்சி என்று எமக்கு விளங்கவில்லை.

பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்து நாட்டு மக்களுக்கு நிவாரண ரீதியில் எரிபொருள் விநியோகிப்பதாக ஆரம்பத்தில் கூறி எரிபொருள் நிறுவனத்தை ஆரம்பித்தனர்.

இருப்பினும் 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த பின்னணியில் ஊழல் இருக்கிறது.

பொறுப்புகளில் உள்ளவர்கள் சுகபோக வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால் நாட்டு மக்கள் மேலும் நெருக்கடிகளுக்கு தள்ளப்படுகிறார்கள்.

அன்றாடம் வாழ்க்கை செலவை கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் வாழ்கிறார்கள். - என்றார். (05)

# 30,000 மெற்றிக் தொன் கனிய மணல் ஏற்றுமதி

வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக பெறுமதியுடைய பெருமளவிலான கனிய மணலை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெறப்பட்ட 30 ஆயிரம் மெற்றிக்தொன் கனியமணலே சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கைகனிப்பொருள் மணல் நிறுவனம் மேற்கொண்ட சர்வதேச அளவிலான கேள்வி மனுக்கோரல் ஊடாக சீன நிறுவனம் ஏற்கனவே தெரிவு செய்யட்டிருந்த நிலையில், திருகோணமலைதுறைமுகத்தின் அஷ்ரப் இறங்கு துறையில் இருந்து அதனை கப்பலேற்றும் நடவடிக்கைகள் கடந்த சில நாள்களாக இடம்பெற்றன.

சீன நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியாக புத்தளம் இல்மனைற் நிறுவனம் செயற்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தில் இடம்பெற்ற கப்பலேற்றும் நிகழ்வில் புத்தளம் இல்மனைட் நிறுவனத்தின் பொது முகாமையாளரும் கனிம அகழ்வுத் துறை நிபுணருமான றையான் றொக்வூட் விளக்கமளிக்கையில் -

இலங்கை வழமையாக இறக்குமதிகளையே மேற்கொள்கின்றது. ஆனால் இப்போது எமது நாட்டிலேயே அகழப்பட்ட கனியமணலை ஏற்றுமதி செய்கின்றோம்.

இது ஒரு சிறப்புவாய்ந்த ஏற்றுமதியாகும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இக்காலத்தில் இடம்பெறும் இந்த ஏற்றுமதி மூலம் பல மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி இலங்கைக்குக் கிடைக்கின்றது.

நாட்டின் டொலர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது பங்களிப்பை வழங்கும் என்றார். இது குறித்து இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனத்தின் பதில் பிரதிபொதுமுகாமையாளரான எஸ். ராஜகுரு கூறுகையில், 65 வருடங்களுக்குப் பிறகு இவ்வாறான பாரிய ஏற்றுமதி ஒன்றை நாம் மேற்கொள்கின்றோம்.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளபட்ட விலைமனுக்கோரலில் அதிக விலையைக் கூறியிருந்த சீன நிறுவனத்துக்கே இது ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அரச நிறுவனம் என்ற வகையில் இது பெரிய வெற்றியாகும். - என்றார்.

இதேவேளை, இலங்கையின் முதலாவதும் உலகத் தரம் வாய்ந்ததுமான கனிப்பொருள் பதப்படுத்தல் வசதியை நிறுவுவதற்கு புத்தளம் இல்மனைற் லிமிடெட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கனிம அகழ்வு துறையின் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக தனது பங்காளர் நிறுவனங்களுடன் இணைந்து ஏற்கனவே 20 மில்லியன் அமெரிக்க டொலரை மூதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் கிராமத்தில் உள்ள விவசாய காணியில் பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுர பகுதியில் தனது விவசாய காணியில் பாதுகாப்புக்காக அனுமதியின்றி பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சமபவம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளதுடன் நுவரெலியா சாந்திபுரம் கிரமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர் மைக்கல் ஹெக்குலஸ் டி சில்வா (வயது 66) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியாபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 157 ஆண்டு நிறைவை கொண்டாடிய இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

இலங்கைபொலிஸின் 157 ஆவது ஆண்டுநினைவு தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டதுடன் இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மக்கள் தொடர்புகள் மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் நோக்குடன் சமய வழிபாடுகளும் இடம்பெற்றன.

கொழும்பில் அமைந்துள்ள பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் 157 ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை இரவு கொண்டாடப்பட்டது.

மேலும் இந்து சமய முறைக்கு அமைய பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்திலும், மோதரை புனித ஜேம்ஸ் கத்தோலிக்க தேவாலயத்திலும் ஆராதனைகள் இடம்பெற்றன.

மேலும் கறுவாத்தோட்டத்திலுள்ள பள்ளிவாசலிலும் இஸ்லாமிய சமய வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும் பல சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் கலந்து கொண்டனர். (05)

# மக்களைப் பற்றியும் கொஞ்சமாவது ஆட்சியாளர்கள் சிந்திக்கவேண்டும்

## ஜகத் குமார கூறுகிறார்



சர்வதேச நாணய நிதியமோ அல்லது உலக வங்கியோ இந்த அரசாங்கத்தை நியமிக்கவில்லை. நாட்டு மக்களே நியமித்தனர்.

வாழ்க்கை செலவு அதிகரித்தவுடன் மக்கள் எந்தளவு பாதிக்கப்படுவார்கள் என ஆட்சியாளர்கள் என்ற வகையில் நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த சிந்தனை எமது ஆட்சியாளர்களுக்கு ஏன் வருவதில்லை என்ற கேள்வி எனக்குள் எழுகிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக நாம் எதிர்ப்பு தெரிவித்தோம்.

கம்மன்பில அமைச்சரோ அல்லது வேறு யாராலுமோ இல்லை. மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை என்பதால் நாம் அதனை எதிர்த்தோம்.

அரசாங்கம் என்ற வகையில் உலக சந்தையில் விலைக்கு ஏற்ப விலைகளை அதிகரித்தால் மக்கள் மீது பாரிய தொரு சுமையை சுமத்துகிறோம் என்று அர்த்த மாகும்.

உலக சந்தையில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனக் கூறி உள்நாட்டு சந்தையிலும் பொருள்களின் விலைகளை அதிகரிப்பதற்கு எமக்குப் பொறுப்பு கிடையாது.

உலக சந்தையில் எரி பொருள் விலைக்கு ஏற்ப விலை அதிகரிக்கப்படுவதாக கூறினாலும் அந்த விலை இரண்டு அல்லது மூன்று மடங்குகளாக அதிகரிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியமோ அல்லது உலக வங்கியோ இந்த அரசாங்கத்தை நியமிக்கவில்லை. நாட்டு மக்களே நியமித்தனர்.

விசேடமாக சிறு வருமானங்களைப் பெறும் மக்கள், சிறுநீரக கொடுப்பனவுகளை பெறுவோர், முதியோர் கொடுப்பனவுகளை பெறும் தரப்பினர், சமுர்த்தி கொடுப்பனவுகள், விசேட தேவையுடையோர் மற்றும் வேறு நலன்புரி கொடுப்பனவுகளை பெறும் தரப்பினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறவில்லை.

ஜூன், ஜூலை மாதங்கள் நிறைவடைந்து தற்போது செப்ரெம்பர் மாதமும் ஆரம்பித்துள்ளது. இந்த நான்கு மாதங்களும் வாழ்க்கைச் செலவைக் கொண்டு நடத்துவது எவ்வாறு? மறுபக்கத்தில் வாழ்க்கை செலவு அதிகரித்தவுடன் மக்கள் எந்த அளவு பாதிக்கப்படுவார்கள் என ஆட்சியாளர்கள் என்ற வகையில் நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த சிந்தனை எமது ஆட்சியாளர்களுக்கு ஏன் வருவதில்லை என்ற கேள்வி எனக்குள் எழுகிறது. - என்றார். (05)

# மக்கள் தெளிவாக உள்ளமையால் இனி அவர்களை ஏமாற்ற முடியாது

## நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்



நாட்டு மக்கள் மிக தெளிவாக உள்ளார்கள். வழமையான அரசியல் பிரசாரங்களை குறிப்பிட்டுக் கொண்டு மக்களை ஏமாற்ற முடியாது.

மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய அனைத்து அரசியல் கட்சிகளும் செயற்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் 72 ஆவது வருட நிறைவு நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இறந்த காலத்தை பற்றி பேச விரும்பவில்லை, ஏனெனில் நாட்டுக்காக கட்சி பல சேவைகளை ஆற்றியுள்ளது.

நாடு தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்கு யார்? பொறுப்புக் கூற வேண்டும் என்று ஆராய்வதை காட்டிலும் பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய மூடிய பொருளாதாரக் கொள்கையை முழுமையாக அமுல்படுத்தியிருந்தால் நாடு இன்று இந்த நிலையை அடைந்திருக்காது.

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பிரபல்யமடையாத தீர்மானத்தை அவர் எடுத்தார். இருப்பினும் அரசியல் மாற்றத்துடன் அவரது பொருளாதார கொள்கையைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டில் போராட்டம் தோற்றம் பெற்றது. அரலகய (போராட்டம்) ஏன் தோற்றம் பெற்றது என்பதை ஆராய்ந்து அதற்கு விடை தேட வேண்டும். இளைஞர்கள் புதிய அரசியல் கலாசாரத்தை எதிர்பார்க்கிறார்கள்.

நாட்டு மக்கள் மிகத் தெளிவாக உள்ளார்கள். வழமையான அரசியல் பிரசாரங்களைக் குறிப்பிட்டுக் கொண்டு மக்களை ஏமாற்ற முடியாது. மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய அனைத்து அரசியல் கட்சிகளும் செயற்பட வேண்டும். எதிர்வரும் காலங்களில் தோற்றம் பெறும் சவால்களை கட்சி என்ற ரீதியில் சிறந்த முறையில் வெற்றி கொள்வோம். - என்றார். (05)

# படகில் சென்று தமிழகத் தலைவர்களுடன் பேச்சு நடத்த கடற்றொழில் சமாசம் முடிவு




இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சில் ஈடுபடப் போவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்ட மொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றைகையளித்தோம். குறித்த மகஜர் கையளித்து 14 நாள்களுக்குள் இந்திய கடற்றொழி லாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் வடபகுதி மீனவர்கள் 14 பேர் கடல் வழியாக படகு மூலம் தமிழகம் சென்று, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை ஆகியோரை சந்தித்துப் பேச தீர்மானித்துள்ளோம். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# கம்பஹாவில் துப்பாக்கிச் சூடு இசைக்குழு உறுப்பினர் கைது

கம்பஹா, வெலிவேரிய பகுதியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி காரில் பயணித்துக்கொண்டிருந்த நபர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் நீர்கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் நீர்கொழும்பில் வசிக்கும் 31 வயதுடைய நபர் எனவும் பிரபல இசைக்குழுவைச் சேர்ந்தவர் எனவும் கம்பஹா பிரதேச குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கைதான நபர் தொடர்பான சிசிடிவி பதிவுக் காட்சிகளின் அடிப்படையிலேயே இந்த கைது மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டங்களைத் திருத்த வேண்டிய நேரம் இப்போது வந்துவிட்டது

யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையில்காய்ச்சல்என்று சிகிச்சைபெறவந்த 8 வயதுச்சிறுமியின்கையைமணிக்கட்டுடன் அகற்றவேண்டிய அவல நிலை அங்கு சிகிச்சையின்போது ஏற்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அது குறித்து விசாரிப்பதற்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்திருக்கிறது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமிக்கு திரவ மருந்துகளை ஏற்றுவதற்கு வசதியாக அவரது கையில் கனுலா எப்படும் ஒரு ஊசி ஏற்றப்பட்டுள்ளது. அடிக்கடி ஊசியைக் கையில் குத்துவதற்குப் பதில் ஒரு தடவையில் இந்த கனூலா ஊசியை கையில் குற்றிவிட்டால் அதன் வழியாக ஒவ்வொரு தடவையும் மருந்தை ஏற்றிக்கொள்ள முடியும். அப்படித்தான் இந்தச் சிறுமியின் கையிலும் கனுலா ஏற்றப்பட்டுள்ளது.

அந்தக் கனூலா ஊசியினால் கைகளில் அதிக வலி ஏற்படுவதாகச் சிறுமி தெரிவித்திருக்கிறார். ஆனால் அது கவனத்தில்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. சிறுமிக்கு வலி அதிகமாகி கையில் வீக்கம் ஏற்படுவதாக அவரது பெற்றோர் அங்கிருந்த தாதியர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். அப்போதும் எந்த கவனிப்பும் இன்றி அந்த முறைப்பாடுகள் புறக்கணிக்கப்பட்டன என்று குடும்பத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கனூலா ஊசி தவறாக ஏற்றியதன் விளைவாக நாடி, நாளங்கள் பாதிக்கப்பட்டு கையிற்கான குருதிச் சுற்றோட்டம் தடைப்பட்டதால் சிறுமியின் கை செயலிழந்து போயுள்ளது என்றும் அதனை உடனடியாகக் கவனிக்காமல் விடுத்ததன் மூலம் கையை அகற்றவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் நம்பப்படுகின்றது. மருத்துவ விசாரணைகளின் பின்னரே அது தொடர்பான முழுமையான விவரங்கள் வெளிப்படும். தவறு யாருடையது என்பதும் தெரியவரும்.

வடக்கு மாகாணத்தில் தாதியர்களின் கவனக்குறைவு அல்லது வேண்டுமென்றே அவர்கள் மருத்துவ புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர் என்கிற குற்றச்சாட்டு எழுவது கடந்த ஒரு மாத காலத்தில் இது இரண்டாவது முறை. இதற்கு முன்னர் வவுனியாவில் பச்சிளம் குழந்தை ஒன்றையும் அதைப் பெற்றெடுத்த தாய் ஒருவரையும் தாதியர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தினார்கள் என்கிற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. அது தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த விசாரணையின் அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. யார் தவறிழைத்தார்கள், அதற்கான தண்டனை என்ன என்பன போன்ற விவரங்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த விசாரணை அறிக்கைகள் வெளிவந்தாலும்கூட – யார் குற்றமிழைத்தவர் என்று கண்டுபிடிக்கப்பட்டாலும்கூட – குற்றமிழைத்தவர்களுக்கு இடமாற்றம் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான தண்டனைகளாவது கிடைத்துவிடும் சாத்தியங்கள் எதுவும் இல்லை. ஏனெனில் சட்டத்தில் அதற்கு எந்த இடமுமில்லை. மருத்துவப் புறக்கணிப்பு, அல்லது மருத்துவத் தவறுகள் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களுக்கு இழப்பீடு பெறுவதற்கான சட்டங்களோ, தவறிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கான சட்டங்களோ இல்லாத நிலையில் விசாரணைக் குழுக்களை நியமிப்பதால் எந்தப் பெரும் பயனும் ஏற்படப்போவதில்லை என்பது திண்ணம்.

எனவே அதிகரித்து வரும் மருத்துவப் புறக்கணிப்புத் தொடர்பான குற்றச்சாட்டுக்களைக் கவனத்தில் எடுத்து இது தொடர்பாக ஆராய்ந்து புதிய சட்டங்களை இயற்றுவதற்கு நாடாளுமன்றஉறுப்பினர்கள்நடவடிக்கைகளைஎடுக்கவேண்டும். காலத்திற்கு ஏற்ப இது விடயத்தில் நாமும் மாறித்தான் ஆகவேண்டும். மருத்துவம் ஒரு மிகப் பெரும் வியாபாரத் துறையாக விருத்தியடைந்த பின்னர் இதுபோன்ற தவறுகள் தண்டிக்கப்படாவிட்டால் அது பாரதூரமான விளைவிகளை அப்பாவி மக்களிடம் ஏற்படுத்தும். ஏற்கனவே தரமற்ற மருந்தின் காரணமாகப் பலர் தமது கண் பார்வையை இழந்துள்ளனர். அவர்களுக்கும் இழப்பீடுகள் எவையும் வழங்கப்படவில்லை. சில மருத்துவர்கள் தமது தனிப்பட்ட பணத்தில் இருந்து இழப்பீடு கொடுத்துள்ளார்கள் என்பதற்கு அப்பால் சட்டப்படியான எந்த ஏற்பாடுகளும்பாதிக்கப்பட்டவர்களைப்பாதுகாக்கவும்அவர்களுக்கு உதவிகளை வழங்கவும் இதுவரை இயற்றப்படவில்லை. இந்த அவல நிலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, மருத்துவம் சார்ந்த சட்டங்கள் நவீன மயப்படுத்தப்படவேண்டும். அதில் மருத்துவப் புறக்கணிப்புத் தொடர்பான புதிய ஏற்பாடுகளும் உள்ளடக்கப்படவேண்டும்

## கற்பகதரு என்னும் அற்புதம்
# ஒலைகளின் உன்னதம்

**அங்கம் – 12**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனையும் தென்னையும் எங்களின் வாழ்வில் பயனை அளிக்கும் வகையிலேதான் இருக்கிறது.அதனில் எந்த மாற்றுக் கருத்துக்களுக்குமே இடமில்லை என்றுதான் கொள்ள வேண்டும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் முக்கியத்துவம் உடையதாகவே இருப்பதையும் மறுத்துவிட முடியாது. ஆனால் பனையின்ஓலை,தென்னையின்ஓலைஎன்று வரும்பொழுது - பனையின் ஓலைதான் முன்னுக்கு வந்து நின்று விடுவதைக் காண முடிகிறது. காரணம் பனையின் ஓலை பெற்று வந்த வரமென்றுதான் எண்ணத் தோன்றுகிறது.பனை ஓலையின் வன்மையினைத் தென்னை ஓலையானது பெற்றிருக்கவில்லை. அதனால் தென்னை ஓலை ஒரு மட்டோடு நின்று விடுகிறது. பனை ஓலையோ பல நிலைகளில் தன்னை வெளிப்படுத்தி நிற்கிறது என்பதை கருத்திருத்தல் வேண்டும். மங்கலம், அமங்கலம், இரண்டிலும் தென்னை வந்து நிற்கும். தென்னையின் குருத்தோலை - தோரணங்களில் வந்து நிற்கும்.இந்தக் குருத் தோலை மண வீட்டிலும் வரவேற்கும். பிண வீட்டிலும் முன்னிற்கும். பச்சைத்தென்னோலையில்பன்னாங்கு செய்து அதனை இறுதி ஊர்வலத்தில் பயன்படுத்தும் நிலையும் வழமையில் இருக்கிறது. பன்னாங்காய், கிடுகாய் ஆகிய நிலையில் தென்னோலை தன்னை நிறுத்திக் கொண்டுவிடும்.

பனையின் ஓலை குருத்தோலையாயும், அதன்பின் முற்றிய நிலையிலும் பயனினைக் கொடுத்தே நிற் கிறது. குருத் தோலையுடன் நின்றுவிடாமல் அதனுடன் இணைந்திருக்கும் ஈர்க்கினையுமே பயன்பாட்டுக்குக் கொடுத்தும் நிற்கிறது என்பதும் நோக்கத் தக்கதாகும். ஈர்க்குடன் அமைந்துவிடாது - குருத்தோ லையுடன் இணைந்திருக்கும் மட்டையினையும் வழங்கி மகிழ்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தென்னோலை என்பதன் பயன்பாடு ஒரு மட்டோடு நின்று விடுகிறது. தென்னோலைக்குஎன்றுகைத்தொழில் அமைவதில்லை. ஆனால் பனை ஓலை என்பது கைத்தொழில் நிலையில் தன்னை நிலை நிறுத்தி வைத்தே இருக்கிறது.ஈழத்திலும், இந்தியாவிலும் பனை ஓலைக்கைத்தொழில்கள் இன்று -கவனிக்கப்படும் ஒரு கைத்தொழிலாக வளர்ந்து வருகிறது எனலாம்.

பனை ஓலையினால் பலவகைப் பொருட்கள் செய்யப்பட்டு அத்தனையும் பொருளாதார நிலையில் முன்னிற்கின்றன என்பதை யாவரும் அறிவோம். அப்படியான பனை ஓலையினாலாகிய பனங்குடைசங்ககாலத்தில்பயன்பாட்டில் இருந்திருக்கிறது என்பதையும் அறிகின்றோம்.பனை ஓலையின் வன்மை யான தன்மையானது மழை நீரை உட்புக விடாமல் தடுத்துவிடும். இந்தத் தன்மையினை அறிந்திட்ட பறவைகளே பனை ஓலைகளைத் தேர்ந்து அதனைக் கொண்டு கூடுகள் கட்டி வாழ்ந்ததாய் சங்கப் பாட ல்கள் காட்டி நிற்கின்றன.இப்படிப் பறவைகளால் அமைக்கப்பட்ட அந்தக் கூடுகள் குடம்பை என்று அழைக்கப்பட்டன.

ஓங்கு மணல் உடுத்த நெடுமாய்ப் பெண்ணை
வீங்குமடற் குடம்பைப் பைதல் வெண்குருகு

உயர்ந்த மணல் திடரில் நீண்டு வளர்ந்திருந்த மரத்தின் உச்சியிலே - நெருக்கமான பனைமடலால் கட் டிய கூட்டில் - வெண்மை நிறமான நாரை ஒன்று இருந்தது என்னும் செய்தியை நற்றிணை என்னும் இலக்கியம் காட்டி நிற்கிறது, பறவைக்குக் கூட பனை ஓலை கைகொடுத்து நிற்கிறது என்றால் அது பனை ஓலையின் பெருமையல்லால் வேறென்ன வென்று எடுத்துக் கொள்ளுவது !

மழையில்நனையாதுமனிதனைக் காத்திட உதவிய பனங்குடை பற்றி எங்கள் தமிழ் மூதாட்டி ஔவையாரும் சொல்லுகிறார்.

இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போர்
இனக்களிற் றியானை யியறேர்க் குரிசில்
நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்சன்
அடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தனோ னிவனும்
உறைப்புழி யோலை போல

மிகவும் கடுமையாக மழை பெய்தாலும் தடுத்து - தன்னைப் பிடித்திருப்போரை காத்தித்து நிற்கும் பனை ஓலையினால் ஆகிய பனங்குடை போல - உன்னை நோக்கி பகைவரால் ஏவப்படும் அம்புகள் தாக்கிடாவண்ணம் தடுத்து நிற்கும் தடுப்பாய் இவ்வீரன் விளங்குகிறான் என்று ஔவைப் பாட்டி கூறு வதாய் வரும் சங்கப் பாட்டில் பனங்குடை எடுத்துக்காட்டாய் காட்டப்படுவது கருத்திருத்த வேண்டிய தாய் இருக்கிறது அல்லவா !

பனை ஓலை குடையாய் அமைந்து காப்பாற்றி வந்திருக்கிறது. வீட்டின் கூரையாய் அமைந்து - வெப்பமும், குளிரும் எம்மை அணுகவிடாமல் இப்போதும் கவசமாயாகிக் காத்தே வருகிறது. காத்து நிற்கும் பனை ஓலை கடவுளரின் வழிபாட்டிலும் தன்னைப் புகுத்தியிருக்கிறது. பனை ஓலை எப்படி வழிபாட் டில் நுழைந்தது என்று எண்ணுகிறீர்களா ? கிராமப் புறங்களில் தெய்வங்களுக்குப் படையல் இடும் வேளை - பனை ஓலையினாலான பாயினைப் பயன்படுத்தி அதில் பலவகையான பதார்த்தங்களைப் படைப்பார்கள். குறிப்பாக சோற்றினைப் படைப்பதை இன்றும் காணமுடிகிறது. அது மட்டு மன்றி பனை ஓலையினாலான பெட்டிகளையும் பயன்படுத்தி படையலுக்கான பலவற்றை அதில் இட்டும் வைப்பதை யும் காண் கின்றோம்.





சித்திரை மாதத்தில் நடைபெறும் சித்திரைக் கஞ்சித் திருவிழா மறக்க முடியாததாகும். இந்த வேளையில் ஊர்மக்கள் அனைவரும் சூழவுள்ள கோயில்களில் பெரிய அளவில் அண்டாவினை வைத்து சித் திரைக் கஞ்சியைக் காய்ச்சுவார்கள். காய்ச்சிய கஞ்சி கடவுளுக்குப் படைத்து பூசை முடிந்த பின்னர் - அந்தக் கஞ்சியை அனைவரும் பருகுவதற்கு ஒரு பாத்திரம் உடனே வந்து நிற்கும். அந்தப் பாத்திரத்தின் பெயர் பிளா ஆகும்.அந்தப் பிளாவினை அளித்து நிற்பது எங்கள் கற்பகதருவாம் பனையின் ஓலைகளே என்பதை அனைவரும் கருத்திருத்தல் அவசியமாகும். சுடச் சுடச் சித்திரைக் கஞ்சியினைச் சுவையோடு அருந்திடத் துணையாய் வந்துவிடும் பனை ஓலை. கஞ்சியின் சூடு கூட கைக்குத் தெரியாமல் காப்பாற்றி நிற்கும் பனை ஓலை.சுடு கஞ்சியை வேறு வகையான எந்தப் பாத்திரத்தில் குடித்தாலும் வராத சுவையினை - பனை ஓலையினாலான பிளா என்னும் உடனடியான பாத்திரம் தந்து நிற்கும் என்பதை மனமிருத்தல் வேண்டும். பச்சைப் பனை ஓலையின் வாசனை கஞ்சியினுடன் சேர்ந்துமேலும்சுவையினை வழங்கி நிற்கும். இதனை எழுத்தில் வடிப்பதை விட - உண்மை யாகவே குடித்து மகிழ்ந்தால்தான் இதன் அருமை அகத்தில் பதியும்.

பனைஓலைதொடர்பான கைத்தொழில்கள் இந்தியாவில் பல இடங்களில் இன்றும் நடை பெற்று வருகின்றன. இலங்கையில் வடபகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் இடம் பெற்றும் வருகின்றன. வட மாகா ணத்தில் பனை நிறையவே காணப்படுகிறது. கிழக்கிலங்கையிலும் கணிசமாய் பனை காணப்படுகிறது. கிழக்கிலைங்கையில் -தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கல்குடா, திராய்மடு, பாலமீன்காடு போன்ற இடங்க ளில் பாய், சுளகு, உமல், கூடை, தொப்பி போன்ற பொருட்கள் செய்யப்படுகின்றன. வடஇலங்கையில் வேலணை, அல்வாய், அச்சுவேலி, வரணி, மாகியப்பிட்டி, சின்னமடு, மட்டுவில், அல்லாரை, உடுப்பிட்டி, புத்தூர், எழுவைதீவு, நெடுந்தீவு, பருத்தித்துறை, தேவைரையாளி, புங்குடுதீவு, புத்தூர் கிழக்கு, அம்பனை, மயிலிட்டி, கல்விளான், துணுக்காய் போன்ற பகுதிகளிலும் இன்னும் பல பகுதிகளிலும் பனை ஓலையினா லான கைத்தொழில் நடைபெற்று வருகிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க...)



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு விசுவாசமான அதிகாரிகள் ஈஸ்டர் சம்பவத்துக்கு உடந்தை

## சனல் - 4 தகவல்

இலங்கையில் இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு ராஜ பகஷகுடும்பத்துக்கு விசுவாச மான இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தின் செனல் - 4 இல் ஒளிபரப்பப்படவுள்ள நேர்காணல் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ராஜபக்ஷர்களை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்துவதற்காக இராணுவ உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சாலி மற்றும் இஸ்லாமிய அரசுடன் இணைந்த நபர்களுடன் ஒருசதித்திட்டம்தீட்டுவதற்காக 2018 இல் ஒரு சந்திப்பு இடம்பெற்றதாகவும் அந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு இடம்பெற்றுதுடன் சுரேஷ் சாலி என்னிடம் வந்து ராஜபக்ஷக்களுக்குத் தேவை இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல் அப்போது தான் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாவதற்கு ஒரே வழி' எனக் கூறினார் என ஹன்சீர் ஆசாத் மௌலானா கூறுகிறார்.

'தாக்குதல்திட்டம் என்பது ஓரிருநாள்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல, இது இரண்டு, மூன்று ஆண்டுகளாக மேற் கொள்ளப்பட்டுள்ளது.'

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சுரேஷ் சாலி இராணுவப் புலனாய்வுத்தலைவராகபதவி உயர்வு பெற்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# சிறுவர் மீதான வன்முறையை எதிர்த்து புதுக்குடியிருப்பில் கவனவீர்ப்பு பேரணி






முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த கவனலீர்ப்பு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஏ.யு. லங்கா நிறுவனத்தினர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்த விழிப்புணர்வு பேரணியை முன்னெடுத்திருந்தனர். இதில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ, ஏ.யு. லங்கா நிறுவனத்தின் செயற்திட்ட உத்தியோகத்தர் பி.நந்தகுமார், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (05)

# முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கம் பதில் வழங்குதல் வேண்டும்

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வலியுறுத்து



வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு நாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். நாட்டின் சுகாதார துறையின் பிரச்சினைகள் மாத்திரம் அல்ல.

மக்கள் உயிர் வாழ்வதற்கும் கூட முடியாத நிலை காணப்படுகிறது. இந்நிலையில் அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு உடனடியாக பதில் வழங்க வேண்டும் என எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

வரலாற்றில்என்றும்இல்லாதவாறுமக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். நாட்டில்சுகாதாரதுறையின்பிரச்சினைகள்மாத்திரம் இன்றி மக்களுக்கு உயிர் வாழ்வதற்கும் கூட முடியாத நிலை காணப்படுகிறது.

சுகாதாரத்துறையைஎடுத்துக்கொண்டால்மருந்துதட்டுப்பாடு, தரமற்றமருந்துகொள்வனவு, விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் வெளியேற்றம் என பிரச்சினைகளை அடிக்கிக்கொண்டே போகலாம். ஆசியா நாடுகளில்மருந்துகொள்வனவுக்கு அதிகம்நிதி ஒதுக்கும் நாடாக இலங்கை காணப்படுகிறது.

இந்த நிலையில் சுகாதார துறையில் பல பிரச்சினைகள் உள்ளன. இது மக்களின் உயிர் தொடர்பிலான முக்கிய பிரச்சினை. இதற்கு அரசாங்கத்திடம் எந்தவொரு தீர்வுகளும் இல்லை. அரசாங்கத்தின் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு பதில் வழங்க வேண்டியுள்ளது.

எமது அரசாங்கத்தில் இந்த பிரச் சினைகளுக்கு தீர்வு காணுவோம். பொருளாதாரம், சுகாதாரம், விவசாயம் என அனைத்து துறைகளிலும் தெளிவான கொள்கைகளைக் கொண்டுபயணிப்போம். நாட்டைகட்டியெழுப்ப சரியான தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும்.

தவறான தீர்மானங்கள் எடுப்பதை நிறுத்த வேண்டும். சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கக் கூடாது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் நிலைமை கண்டு ஆட்சியாளர்கள் கவலை அடைவதில்லை. - என்றார். (05)

# பொருளாதாரத்தை உயர்த்த வடக்குக்கு விசேட திட்டங்கள்

## இராஜாங்க அமைச்சர் ரணவீர உத்தரவாதம்

தேசிய வருமானத்துக்கு வடக்கிலிருந்து கிடைக்கும் தொகையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் பிரச்சன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

யாழில் நடைபெற்ற ஜப்னா எடிசன் 2023 கண்காட்சியின் ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஏற்றுமதி வர்த்தகத்தை ஊக்கப்படுத்தும் வகையிலேயே இந்தக் கண்காட்சியானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டின் தேசிய வருமானத்தில் 46 வீதமானவை மேல் மாகாணத்திலிருந்தே கிடைத்து வருகின்றன. தென் மாகாணத்திலிருந்து 10.8 வீதம் கிடைக்கின்றன.

ஊவா மாகாணத்திலிருந்தும் வடக்கை விட அதிகமான வருமானங்கள் கிடைக்கின்றன.

ஆனால், வடமாகாணத்திலிருந்து 4 வீதமான வருமானமே கிடைக்கிறது.

இந்த மாகாணத்துக்காக அரசாங்கம் பல திட்டங்களை கொண்டுவந்துள்ளது.

நீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாக இங்கே இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்திவங்கியிடமிருந்து கடன்களைப் பெற்று, நாட்டை அபிவிருத்தி செய்வதைவிட எமது உற்பத்தி பொருளாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது அயல் நாடான இந்தியாவில், அந்நாட்டின் சனத்தொகையில் 14 வீதமானோர் கைத்தொழிலாளர்களாக இருக்கிறார்கள்.

37 வீதமாக தொழிற்சாலைகள் அங்கு காணப்படுகின்றன. வியட்நாமை பொறுத்தவரை, அந்த நாடும் பொருளாதார ரீதியாக உயர்ந்து வருகிறது.

இவற்றை இலக்காகக் கொண்டு, நாம் எமது உற்பத்திகளை ஊக்குவித்து, முன்னோக்கி பயணிக்க வேண்டும்.

யுத்தம் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம்.

இவற்றிலிருந்து நாட்டை மீட்டெடுக்க நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பயணிக்க வேண்டும்- என்றார். (05)

# மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உணவு நிறுத்தம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உணவு வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

உணவு வழங்குநர்களுக்குசெலுத்தப்படும் கொடுப்பனவுகள் பல மாதங்களாக வழங்கப்படாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


வைத்தியசாலைக்கு உணவு வழங்கு-வதற்கான ரெண்டர்கள் அதிக விலைக்கு வழங்கப்பட்டதாக கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில்உணவுவழங்குநர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகளை வழங்க முடியாததால் உணவு விநியோகம் நிறுத்தப் பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். (05)


# கற்பகதரு என்னும் அற்புதம்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி. .)

பாய் இளைத்தலில் பெரும்பாலும் பெண்களே ஈடுபடுகிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது.பாய் என்னும் நிலையில் பனை ஓலைப் பாய் பல வகையில் அமைகிறது. கதிர்ப்பாய், தடுக்குப்பாய், படுக்கைப்பாய், வர்ணப்பாய், பந்திப்பாய், சோற்றுப்பாய், எச்சந்தாங்கிப்பாய் என்று பல நிலைகளில் பாய் அமைந்து பயன்பட்டு நிற்கிறது,பனை ஓலையினால் பாய்களை இளைக்கும் பொழுது - கைவண்ண த்தையும் தொழிலாளர் வெளிப்படுத்தி நிற்கிறார்கள். பாய்களை இளைக்கும் பொழுது பல வடிவங்களை மனமைருத்தி பனை ஓலையிலேயே அழகினைக் கொண்டுவந்து நிறுத்தியும் விடுகிறார்கள்.அழகும். கலை நயமுமாய் பனை ஓலைகள் பல பாய்களாய் மக்களிடம் சென்று சேரும் நிலையினைக் காணுகிறோம். பனை ஓலைப் பாயினை இளைக்கும் பொழுது புளியங்கொட்டைப் பின்னல், சதுரவடிவ அமைப்பு, நட்சத்திர வடிவ அமைப்பு, விரிகோணவடிவ அமைப்பு, வைரவடிவ அமைப்பு, புள்ளி வடிவ அமைப்பு,என்று பல அமைப்புகள் வரும் வகையில் பாய்களின் பின்னல் முறை அமையப் பெற்றிருக்கும். இவற்றுடன் நில் லாமல் மேலும் அழகினையும் கவர்ச்சியினையும் காட்டுவதற்காக , கிளி, மரம், பூக்கள், போன்றவற்றையும் முக்கோண அமைப்பில் வரும் வகையில் வண்ணங்கலந்து பாய்களில் இடம் பெறச் செய்து - தங் களின் கலைரசனையினைத் தொழிலாளர்கள் காட்டி நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.மங்கல நிகழ்ச் சிகளுக்காய் வர்ணப்பாய் என்னும் பாயும் இளைக்கப்படுகிறது. வர்ணப்பாய்இளைத்து மங்கல நிக ழ்ச்சிகள் நடைபெறும் வேளை







மங்கல தீபத்தை ஏற்றுவதற்கு தீப்பெட்டி தேவை அல்லவா ? அந்தத் தீப்பெட்டியினையும் பதப்படுத்திய பனை ஓலையினால் செய்-யலாம் என்றும் -அதற்கான தீக்குச்சியை பனம் ஈர்க்கினால் ஆக்கலாம் என்றும் - பனை பற்றிய ஆராய்வில் இருந்த ஆராய்வாளர் சொல்லுவர். அப்படி வருமாயின் எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும். பனையின் நிலையும் பெரும் வணிகமாய் மாறிவிடும் அல்லவா !

ஆயிரத்துத் தொழாயிரத்து ஐம்பத்து இரண்டாம்ஆண்டுபன்னவேலைக்குஎன்று ஒரு பயிற்சி நிலை யம் யாழ்மாவட்டதில் ஸ்தாபிக்கப்பட்டது. அதனை ஸ்தாபித்தார் ஒரு கல்வி அதிகாரியாவார். அவர் தான் தென்கோவை சுவாமிநாதன் அவர்கள். அவர் புகழ்பூத்த கல்வியியலாளராயும் சமூகச் சிந்தனை யாளராகவும் விளங்கினார்.பன்ன வேலையினைப் பல பெண்களும் பயின்று அதன் மூலம் பாடசாலைகளில் ஆசிரியராகவும் = இப்பெரியாரின் வழி காட்டல் அமைந்தது எனலாம். பன்ன வேலையினைப் பாடசாலையில் ஒரு பாட மாகப், படிப்பிக்கவும் பலரும் அப்பணியில் இணைந்திடவும், இவரின் முயற்சி பெருங்காரணமாய் அமைந் திருந்தது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். பனை அபிவிருத்தியிலும் இப்பெரியார்மிகவும்சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார் என்று அறிய முடிகிறது. இவ்வாறு பனையினை அபிவிருத்தி செய்யும் நிலையில் நின்ற பெரியாரை வாழ்த்தாமல் இருப்பது முறையா ! அவரை வாழ்த்துவதுதான் முறையாகும்.

கைப்பணிக் கலாசா லைக்குவித் திட்டு
நற்பணி புரிந்து நங்கையர் பலரை
ஈண்டிவ ணிருந்து ஆண்டுப் போத்தி
பன்ன வேலைப் பயிற்சியா சிரியை
என்றொரு பணியை இலங்கா தீவகம்
கண்டுபன் னூறு கன்னியர் வாழ்வை
மலரவைத் துள்ள மாபெருந் தயாளன்
கற்பக தருவாம் நம்பனையில்
கனிப்பரும் பொருள்பல வாராய்ச்சி
நற்பயனளிக்கும் நிலையமொன்று
நல்லபி விருத்திச் சங்கமொன்று
உற்பவித் துலகில் உயர்சேவை
ஊக்கி யளித்த உயர்பெருயான்
சிற்பர நருளைச் சேவிக்கும்
சுவாமி நாதப் பெருந்தகையே

காலைக்கதிர் Kalaikkathir

# 'புஷ்பக 27' திரைப்படம் யாழில் வெற்றி நடை!







ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழரின் தொன்மையைத் தேடி செல்லும் முதல் விண்வெளித் திரைப்படமான 'புஷ்பக 27' யாழ்.ராஜா திரையரங்கில், கடந்த சனிக்கிழமை திரையிடப்பட்டது.

சத்தியா மெண்டிசின் திரைக்கதையில், காரை சிவநேசனின் இயக்கத்தில் உருவான இத்திரைப்படத்தினைக் காண ஏராளமான மக்கள் திரையரங்கிற்குப் படையெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் இலங்கையின் ஏனைய இடங்களில் உள்ள திரையரங்குகளிலும், வெளிநாடுகளிலும் இத் திரைப்படத்தை திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக படக் குழுவினர் அறிவித்துள்ளனர். (05)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரு தொகை கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.சுபசிங்க தலைமையிலான குழு இவரைக் கைது செய்தது.

கைது நடவடிக்கையின்போது 765 கிராம் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது

## புயலால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நிவாரணம்

முல்லைத்தீவில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 40 மீனவர்களுக்கு தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் கண்காணிப்பு அலுவலர் ஆ.செ.ஜான்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளாணந்தம் உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.குணபாலன், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 172 பேர் பயன் பெறவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## 2023 உயர் தரப் பரீட்சையை ஒத்திவைக்க சஜித் வலியுறுத்து

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை பிற்போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் உரிமைகளையும் நடைமுறைச் சூழலையும் புறக்கணிக்கும் வகையில் பரீட்சை திணைக்களம் செயற்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

2022 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படாத நிலையில், 2023 ஆம் ஆண்டுக்கான பரீட்சை நவம்பரில் நடத்தப்பட்டால், மாணவர்கள் பாரிய அநீதிக்கு ஆளாக நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நவம்பர் மாதத்தில் பரீட்சையை திட்டமிடுவதால், இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராவதற்கு இரண்டு மாதங்களுக்கும் குறைவான கால அவகாசமே கிடைக்கும் என சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் பாடப்பிரிவுகளை மாற்றி மீண்டும் பரீட்சைக்கு அமர்கின்ற மாணவர்களுக்கு இந்த கால அவகாசம் போதாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (05)

## சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம்: வருத்தம் தெரிவித்தார் சத்தியமூர்த்தி!




யாழில் சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வருத்தம் தெரிவித்துள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறா என்றும் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு தொலைபேசியூடாகவும் எழுத்து மூலமாகவும் அறிவித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸின் உத்தரவின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார். (05)

## தோல்விப் பயத்தால் அரசு தேர்தலை நடத்தமாட்டாது

### கம்மன்பில கூறுகிறார்



தோல்வி பயம் காரணமாக அரசாங்கம் தேர்தலை நடத்தாது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரணில் விக்ரமசிங்கவும் அவருடைய மாமாவான ஜே.ஆர்.ஜயவர்தனவும் தேர்தல் நடத்தாமல் தேர்தல் பத்திரங்களை ஒதுக்கி வைப்பதில் கின்னஸ் சாதனைக்கு சரி சமமாக உரித்துடையவர்கள்.

தேர்தல் வைக்க மாட்டார்கள் காரணம் அரசாங்கம் தோற்பது விருப்பம் இல்லை.

தேர்தலை எப்படியும் நடத்தமாட்டார்கள் நாம்தான் நடத்த வைக்க வேண்டும். தேர்தல் நடத்தும் வரையில் எங்கள் போராட்டத்தை நிறுத்த மாட்டோம்.

நாங்கள் தேர்தலுக்கு தயாராக இருக்கின்றோம். அரசாங்கம் தயாராக இல்லை. - என அவர் மேலும் தெரிவித்தார். (05)



## அவிசாவளையில் இலவச மருத்துவ முகாம்

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்க கொழும்பு மாவட்ட கிளையால் அவிசாவளை, வகரத்தனசார மகா வித்யாலயத்தில் இலவச மருத்துவ முகமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. சுமார் 10 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள், தாதிமார்கள் பங்கேற்ற இந்நிகழ்வில் மூக்கு கண்ணாடி வழங்குதல், மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் என்பன பொதுமக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இச்சங்கத்தினரால் கடந்த வருடமும் கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தில் இவ்வாறான மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதோடு, இனிவரும் காலங்களில் நாடு முழுவதும் இவ்வாறான சமூக செயற்பாடுகள் மற்றும் மருத்துவ முகாம்கள் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.(05)

## சண்டிலிப்பாயில் கோர விபத்து இளைஞர் சாவு

யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில், ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும், இதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் உயிரிழந்தவர் சில்லாலை பகுதியைச் சேர்ந்த 20 வயதான பத்மநாதன் வசீகரன் எனத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் அவரது சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)







## விளையாட்டு உபகரணங்கள் மருதமுனையில் வழங்கிவைப்பு

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகளுக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக, மருதமுனை இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கு உதவுவோம் எனும் நோக்குடன் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இது தொடர்பாக மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டு கழகத்துடனான கலந்துரையாடல், பாவின் டிரேடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் நிறுவன பணிப்பாளர் அல்ஹாஜ் கலீல் முஸ்தபாவுடன் மருதமுனை முஸ்தபா மல்க்ஸ் நிறுவன காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஒலிம்பிக் விளையாட்டு கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் திறன் அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் ஒலிம்பிக் விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை ஒலிம்பிக் விளையாட்டு கழகத்துக்கு வழங்கி உதவிய தொழிலதிபர் கலீல் முஸ்தபா மற்றும் மனாரியன் 88 பிரதான செயற்பாட்டாளர் ஐ.எம்.முக்தார் ஆகியோருக்கு இங்கு நன்றிகளும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டன. (05)

## ரூ. 207 பில்லியன் நோட்டுகளை 2022இல் அழித்தது மத்திய வங்கி

கடந்த ஆண்டு சேதமடைந்த அல்லது சிதைக்கப்பட்ட 207.3 பில்லியன் பெறுமதியான 238.5 மில்லியன் நாணயத்தாள்களை இலங்கை மத்திய வங்கி அழித்துள்ளது.

நாட்டில் சுத்தமான மற்றும் தரமான நாணய புழக்கத்தை உறுதி செய்வதற்காக மத்திய வங்கி அவ்வப்போது சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை அழித்து வருகிறது. 2021 இல் 44.3 பில்லியன் பெறுமதியான 108.2 மில்லியன் நாணயத் தாள்களை அழித்ததுடன் 2020 இல் 62.2 பில்லியன் ரூபா பெறுமதியான 127.3 மில்லியன் நாணயத்தாள்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2019 ஆம் ஆண்டில், 139.8 பில்லியன் பெறுமதியான 235 மில்லியன் நாணயத்தாள்கள் மத்திய வங்கியினால் அழிக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் மொத்தமாக 343.8 மில்லியன் சிதைக்கப்பட்ட நாணயத் தாள்கள் அழிக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

# துன்னாலை சதா சகாய மாதா கொடி ஞாயிறன்று ஏறியது





யாழ். மாவட்டம், கரவெட்டி, துன்னாலை சதா சகாய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஆலய

பிரார்த்தனையினைத் தொடர்ந்து ஞாயிற்று கிழமை மாலை

5.30 மணியளவில் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

பங்குத்தந்தை சாள்ஸ் ஜஸ்டின் தலைமையில் கொடியேற்றம் நிகழ்வுகள் இடம்பெற்றன, தொடர்ந்து நவநாள் பூஜைகளில் முதலாம் நாள் பூஜை அருட்தந்தை விஜின்ரஸினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது செப்டெம்பர் 9 அன்னையின் வீதி வலம் இடம்பெறும். மறுநாள் காலை 7மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி பங்கு தந்தை சாள்ஸ் ஜஸ்டின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு விழா நிறைவுபெறும்.

# திருகோணமலை மாவட்ட மாணவர்கள் விவகாரத்தில் கிழக்கு ஆளுநர் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை

## இம்ரான் எம்.பி. சாடல்

கிழக்கு மாகாண கல்வித்துறையினரால் திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கு இழைக்கட்டு வரும் அநீதியைக் களைந்து நியாயம் வழங்குவதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தோல்வி கண்டுள்ளார் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கிழக்கு மாகாணத்தில் சில பாடங்களுக்கு போதுமானளவு அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும் திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனை சமப்படுத்தி இக் குறையைப் போக்கவுள்ளதாக கிழக்கு ஆளுநர் உறுதியளித்திருந்தார்.

கிழக்கு ஆளுநராக கடமையேற்று 3 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் இந்த ஆசிரியர் சமப்படுத்தல்களை அவரால் செய்ய முடியவில்லை. இந்த விடயத்தில் அவர் உறுதியளித்த காலங்களும் கடந்து விட்டன. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதுடன், இம் மாவட்ட மாணவர்களுக்கு கற்றலில் சம வாய்ப்பு வழங்குவதில் கிழக்கு ஆளுநர் தோல்வி கண்டுள்ளார் என்று கருத வேண்டியுள்ளது.

கடந்த 2 மாதங்களுக்கு முன் வழங்கப்பட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரிடம் எனது கோரிக்கையை விடுத்திருந்தேன்.

கிழக்கில் போதுமானளவு ஆசிரியர்கள் அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதால் சமப்படுத்தல்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் என அப்போது எனக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

எனினும், இதுவரை திருகோணமலை மாவட்ட ஆசிரிய பற்றாக்குறை நிவர்த்திக்கப்படவில்லை. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வரும் அதேவேளை இம்மாவட்டத்தைச்சேர்ந்த கல்வியியற்கல்லூரிஆசிரியர்களும்வேறு மாகாணங்களுக்கு நிமிக்கப்பட்டதால் பெரும் சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார். (05)

# உயர்மட்டத் தலைமைத்துவமிக்க ஆட்சியொன்றை உருவாக்க தயார்

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்



உயர்மட்ட தலைமைத்துத்துடனான ஆட்சியொன்றை நாட்டில் ஸ்தாபிக்கத் தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

காரியாலயமட்டத்திலானதலைமைத்துவம் மற்றும் அரசியல் வஞ்சகம் இல்லாத முறையான தலைமைத்துவம் ஒன்று எரிபொருள் நிறுவனத்துக்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனத்துக்கும்அதேபோன்றுஇலங்கை மின்சார சபை உள்ளிட்ட நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

மின்சார சபை 15 துண்டுகளாக உடையும் வகையில் செயலாளர் காரியாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 15 துண்டுகளாக உடைத்து 15 நிறுவனங்கள் அமைத்தாலும் மின் கட்டணங்கள் குறையாது.

சினொபெக் வந்ததும் எரிபொருள் விலை குறைவடையும் என்று கூறிய கதையை போன்று தான் இந்தக் கதையும். மின் கட்டணங்களை குறைக்க வேண்டுமாயின் மின்சார சபையை முறையாக நிர்வகிக்க வேண்டுமாயின் உயர்மட்டத்திலான தலைமைத்துவம் அவசியம். அதற்குத் தேவையான ஆட்சியைக் கொண்டு வர நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதற்குத்தேவையானமக்கள் தொகுதியினர் எம்முடன் இருக்கின்றார்கள். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## நீதித்துறை....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

என்பது அரசமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மக்களிடத்தில் நிறைவேற்று அதிகாரம் உள்ளது. நீதிமன்ற அதிகாரம் உள்ளது. அடிப்படை உரிமையான வாக்குரிமை உள்ளது. அரசமைப்புக்கு அமைவாக ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்ற அதிகாரங்க ளுககு அமைவாக அவை சுயாதீனமாகச் செயற்படவேண்டும். மக் களின் அபிலாஷைகளைப் பாதிக்கும் வகையில் ஏதெனும் ஒரு நிறுவனம் செயற் படுமாக இருந்தால் அது இறையாண்மையையே பாதிக்கும். வழமையான பொருட்கோடலுக்கு அமைவாக அதிகாரங்கள் பகிரப் படும் விடயத்தினை நடைமுறைப்படுத்த முடியாது.

ஒரு தரப்பிடம் வரைமுறையற்ற அதிகாரங்களை வழங்குவது ஏற்புடையதல்ல. அதன் மூலம் மக்களின் இறைமை பாதிக்கப்படுகின்றது. ஜனநாயக விழுமியங்கள் அழிக்கப் படுகின்றன. அவ்விதமாக இருக்கும் ஆளும் தரப்பால் நிர்வகிக்கப்படும் மக்களின் உரிமைகள் மூழ்கடிக்கப்படும். ஆகவே நீதிமன்றம் மிகவும் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் - என்றார்.

## ராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் எடுத்துச் சென்ற பையில் களவாடப்பட்ட துப்பாக்கி மறைத்து வைக்கப் பட்டிருந்தது. இராணுவப் பொலிஸார் அதனை மீட்டனர்.

தனது சொந்த ஊரான குருநாகலில் தனது மனைவியுடன் திருணமத்தை மீறிய தொடர்பில் இருக்கும் ஒருவரைச் சுட்டுக் கொல்வதற்காக இந்தத் துப்பாக்கியைத் தான் களவாடிச் சென்றார் என்று விசாரணையாளர்களிடம் சிப்பாய் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

## சபாநாயக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்வரும் 5 வருடங்களுக்கான புதிய ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் ஊடக 300 மில்லியன் டொலர்களை ஐக்கிய நாடுகள் சபை வழங்குவதற்குத் தயாராக உள்ளது என்று மார்க் ஆன்ட்ரே பிராஞ்ச் சபாநாயக்கரிடம் தெரிவித்தார்.

இலங்கை நாடாளுமன்றத்தின் அபிவிருத்திப் பங்காளராக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் தொடர்ந்தும் வழங்கிவரும் ஆதரவுகள் தொடர்பில் சபாநாயகர் நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில், இலங்கையின் சட்டவாக்க செயன்முறை, தேர்தல் முறைமை, சமாதனத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மற்றும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

## மாவட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிதப் பிரிவில் நிசாந்தன் முதலாமிடத்தையும், விஞ்ஞானப் பிரிவில் விதுவர்சன் முதலாமிடத்தையும் பெற்றுள்ளதுடன் வர்த்தக பிரிவில் நான்கு மாணவர்கள்3ஏசித்தியையும் பெற்றுள்ளனர்.

## ஐ.தே.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்று முடிந்துள்ள நிலையில், நாட்டின் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக கட்சி சம்மேளனத்தை பிற்போடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில்விக்ரமசிங்கவுடன்கட்சி முகாமைத்துவ குழு கலந்துரையாடியே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. கட்சியின் முகாமைத்துவ குழு ஓரிரு தினங்களில் கூட இருக்கிறது. இதன்போது கட்சி சம்மேளனத்தை கூட்டுவதற்கான திகதி தீர்மானிக்கப்படும்.

பெரும்பாலும் ஒக்டோபர் மாதம் அல்லது அதற்கு அண்மித்த காலத்துக்குள் கூட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். கட்சி சம்மேளனம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. என்றாலும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் தூர பிரதேசங்களில் இருந்துவரும் கட்சி ஆதரவாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்ள நேரிடுவதுடன் சம்மேளனத்தை சிறப்பாக நடத்தி முடிக்க முடியாத நிலை ஏற்படும் என்ற விடயங்களை கருத்திற்கொண்டே பிற்போட தீர்மானித்தோம்.

கட்சி சம்மேளனத்தில் கலந்துகொள்ள மிகவும் ஆர்வமாக இருந்த ஆதரவளர்களுக்கு இதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்துக்காக எமது கவலையை தெரிவித்துக்கொள்கிறோம் - என்றார்.

## பாரதியாரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிகளார் அழகியல் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி, பேராசி ரியர் சி. மௌனகுரு, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

இல்லமாணவர்களுடன் அளவளாவிய கலாநிதி இராஜ்குமார் பாரதி, தனது கொள்ளுப் பாட்டன் பாரதியாரின் பாடல்களை நினைவுகூர்ந்தார்.



# கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலாவுக்கு உயரிய கௌரவமளிப்பு







கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டி கல்முனை கல்வி வலய கல்முனை கர்மேல் பத்திமா கல்லூரியில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நான்கு கல்வி வலயங்களை சேர்ந்த மாணவர்கள் இந்த மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றினர். மாவட்ட மட்ட போட்டிகளின் தொடக்க நிகழ்வை கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபக ரீதியாக தொடங்கி வைத்தார். இங்கு அதிதிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் ஆங்கில கல்வியின் முன்னேற்றம், எதிர்கால ஆங்கிலத்தின் தேவைகள், கிழக்கு மாகாண கல்வி மேம்பாடு தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

எதிர்வரும் செபரெம்பர் 30, 2023 அன்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டு அவருக்கு கல்முனை கல்வி மாவட்டம் சார்பில் சிவப்பு கம்பள வரவேற்பு மரியாதையும் வழங்கப்பட்டதுடன் நினைவுச்சின்னங்களும், பட்டாடைகளும் போத்தி கௌரவிக்கப்பட்டார்.

இங்கு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் உட்பட கல்வி பணிப்பாளர்கள் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி, உதவி கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2023இல் வெளியிடப்பெற்றது.